**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 584 of 2025 |

Depositions of PW -4 witness for ________ { Prosecution / Defence / Court

Name : தங்கராஜ்

Father's Name : நடராஜன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th **day of March** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் காடுவெட்டிபாளையத்தில் குடியிருந்து கொண்டு, தறி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 11.09.2024 ம் தேதியன்று என் மாப்பிள்ளை முத்துக்குமாருக்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாக கேள்விப்பட்டேன். மறுநாள் காலை கருமத்தம்பட்டி நோக்கி வந்து கொண்டிருந்தபோது, மார்க்ஸ் கம்பெனி அருகே கூட்டமாக இருந்தது, போலீசார் விசாரித்து கொண்டிருந்தார்கள். மேலும், சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக நானும், சென்னியப்பன் என்பவரும் கையொப்பம் செய்தோம். மேற்படி பார்வை மகசர் **அ.சா.ஆ.**2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தில் இறந்த முத்துக்குமார் எனது உறவினர் என்றால் சரிதான். சம்பவ இடம் எனக்கு நன்கு பரிட்சயமான இடம்தான் என்றால் சரிதான். சம்பவ இடம் இரவு நேரத்தில் இருட்டாகத்தான் இருக்கும் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் கம்பெனி உள்ளது. கம்பெனியின் முன்பு உள்ள விளக்குகளின் வெளிச்சம் நன்றாக இருக்கும். போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் விசாரித்தார்கள். பார்வை மகசரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தில் இறந்த முத்துக்குமார் எனது உறவினர் என்பதாலும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு எனது காவல் நிலையத்தில் கையொப்பம் செய்துவிட்டு தற்பொழுது சம்பவ இடத்தில் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன நேரம் மற்றும் சொன்ன விதத்தில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் என் முன்னிலையில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.03.04 17:09:01 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**